தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 8, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 23, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை".

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவரே செயலாற்றும் திறனுடையவர்.

1. அரசினர் தீர்மானம்

விதி 32—ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள்—விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

@பட்டியல்கள் 1 முதல் 7

பட்டியல் 1

1—

குளங்கள் தூர் வாருதல்

வினா எண் 1788—திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் சத்திரப்பட்டி கரிசல் குளம், பழனி சீரணூர், வடபருத்தியூர் குளங்கள் தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS